# மாறுதல்கள் நேர்ந்துவரும் புரட்சிக்காலம் இது!

## மகுடங்கள் தகர்ந்து மறைய, சேர்ந்திருந்த நாடுகள் பிரிந்துபோதல் காண்கிறோம்!

———(o)———

## 'அந்நாணக்கு நாடளித்து, அவரடிக்கீழ் பணி செய்வரா?'

———(o)———

## 'சோதிடப் பித்தலாட்டத்தை யொத்ததொரு பித்தலாட்டம்'

———(0)———

## தமிழக எல்லை மாநாட்டில் கவிமணி தேசிக விநாயகம்

"இதுவோர் புரட்சிக் காலம். சிறிது காலத்துக்குள் எத்தனை யெத்தனை மாறுதல்களையே கண்ணால் பார்த்துவிட்டோம்! பாகிஸ்தான் ஏற்பட்டுத் தனிநாடாகப் பிரிந்துபோனதைப் பார்க்கவில்லையா? மகுடங்களெல்லாம் தகர்ந்து மறைந்துபோனதைப் பார்க்கவில்லையா? பன்னூறுண்களாகச் சேர்ந்திருந்த நாடுகள் பிரிகின்றன பிரிந்தநாடுகள் சேர்கின்றன. முடியாட்சி நீங்கிக் குடியாட்சி ஓங்கும் இக்காலத்தில் மக்கள் சாதி சமய வேறுபாடுகளை ஒழித்து, மொழியால் ஒன்றுபட்டு வாழ்வதற்கு வகையேற்படுவது இன்றியமையாதது. அதனாலேவே தெலுங்கர்கள் ஆந்திர மாகாணம் கேட்கிறார்கள். கன்னடர்களும் பிரிந்துபோக விரும்புகிறார்கள். கேரளியர்களும் தனி மாகாணத்துக்கு அரும்பாடுபடுகிறார்கள். இவ்வேளையில் தென்திருவிதாங்கோட்டிலும், செங்கோட்டையிலும், தேவிகுளத்திலும், பீருமேட்டிலும் வாழும் தமிழர்கள் தங்களனைவரையும் தாய்த்தமிழ் நாட்டோடு சேர்க்க வேண்டுமென்று கேட்பதில் குற்றமென்ன இருக்கிறது?"

"திருமணத்துக்குச் சோதிடர்கள் பொருத்தம் பார்ப்பதுண்டு நட்சத்திரப் பொருத்தம், கணப் பொருத்தம், மகேந்திரப் பொருத்தம், ஸ்திரீதீர்க்கப் பொருத்தம், இராசி அதிபதிப் பொருத்தம், வசியப்பொருத்தம், வேதைப் பொருத்தம், சரட்டுப் பொருத்தம் என்று பத்துப் பொருத்தம் சொல்வார்கள். இந்தப் பத்துப் பொருத்தங்களும் ஒத்து இணைந்த மணமக்கள் ஆயிரவரில் எத்தனைபேர் இருக்க முடியும்? மனப்பொருத்தம் ஒன்றுதான் வேண்டியது" என்று கவிமணி தேசிகவிநாயகம் அவர்கள், கன்னியாகுமரியில் நடைபெற்ற தமிழக எல்லைமாநாட்டுத் திறப்புரையில் கூறினார்.

திருவாங்கூர் தமிழ்நாடுகாங்கிரஸ் சார்பில் 6-1-50 அன்று குமரியில் நடைபெற்ற தமிழ்நாடு எல்லை மாநாட்டைத் திறந்துவைத்த கவிமணி தேசிகவிநாயகம் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுச் சுருக்கம் வருமாறு:

பண்டைக் காலத்தில் தென்திருவிதாங்கோடு, பல சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆய்நாடு, தெங்கநாடு, படப்பா நாடு, வள்ளுவநாடு, குறுநாடு, நாஞ்சில்நாடு, புறத்தநாடு என்பவை அவற்றுள் முக்கியமானவை. இவை யாவும் செந்தமிழ் நாடுகளே என்பதைப் பல சந்தர்ப்பங்களிலும் தக்க ஆதாரங்களுடன் விளக்கியுள்ளேன்.

தமிழ் மக்கள் அனைவரும் இன்று ஒருங்கு கூடியிருக்கும் இத்தருணம் குமரியைப் பற்றிய சில விவரங்களை மட்டும் தெரிவிக்கத் துணிகின்றேன்.

இது பாண்டிய நாட்டைச் சேர்ந்த ஒரு ஊர் என்பதில் ஐயமில்லை. கல்லெழுத்துக்களில் 'ராஜ ராஜப் பாண்டி நாட்டு உத்தமசோழவளநாட்டுப் புறத்தாய நாட்டுக் குமரி கன்னியா பகவதியார்' என்று குறிப்பிட்டுள்ளது. புறத்தாய நாடு என்பதற்கு முறத்தாட நாடு என்பது வேறொருபெயர். நாரணவசிநாடு என்ற பெயரும் இதற்குண்டு.

'ஸ்ரீ பாண்டி நாட்டுப்புறத்தாய நாட்டான தென்வாரணவசிநன்னாட்டுக் குமரி கன்னியா பகவதியார்'-என வரும் கல்வெட்டுத்தொடரால் இவற்றை யறியலாம். வாரணவாசி நாடு என்பது இரண்டாவது குலோத்துங்க சோழனுடைய பாட்டன் பெயரால் ஏற்பட்ட பெயராம். இக்குமரிக்குக் 'கங்கைகொண்ட சோழபுரம்' என்ற வேறொரு பெயரும் இருக்கிறது. கங்கைகொண்ட சோழன் என்பது முதல் ராஜேந்திரனுக்கு ஒரு சிறப்புப் பெயர் அதன் காரணமாக இப்பெயர் இதற்கு ஏற்பட்டிருக்கவேண்டும்.

தேவி கோவிலும் சற்று வடபாலிருக்கும் குகநாதேசுவரர் கோவிலும் இங்கு முக்கியமான கோவில்கள். இரண்டிடங்களிலும் ஏறக்குறைய நூறு கல்வெட்டுகளுக்குமேல் காணப்படுகின்றன. அவற்றுள் இரண்டொன்றைத் தவிர மற்றவை யாவும் தமிழ் மொழியில் பொறிக்கப்பட்டுள்ளவையே. குமரி கோவிலில் கோமாதத்தின பீடத்தைச் சுற்றிப் பொறிக்கப்பட்டிருப்பது விஜயநகர வேந்தருடைய

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

Phone No. 4502

விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458

[இலங்கை 10 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (7—1—50) வெளியீடு (8—1—50) [இதழ் 137

## இந்துமகாசபையினரைப் போர்வெறியர் என்கிறார் கிழக்குவங்கப்பிரதமர்!

### பாகிஸ்தான் பேச்சை எடுக்காதீரென ஆப்பு!

### இந்தியாவோடு இணைவதென்பது அர்த்தமும் பொருத்தமுமற்றதாம்

இந்தோ—பாகிஸ்தான் உறவு பற்றி கிழக்கு வங்கப் பிரதமர் ஜன 4-ந் தேதியன்று வருணித்தார்.

பாகிஸ்தான் எதிரிகளுக்கு எனது நேசமுறை ஆய்வுரை என்னவென்றால், "பாகிஸ்தான் பற்றிப்பேச்சை யெடுக்காதீர்; அதில் கைவைக்க வேண்டாம்" என்பதேயாகுமென்று குறிப்பிட்டார். இந்துமகாசபை அண்மையில் கல்கத்தாவில் கூடி தீர்மானம் நிறைவேற்றியிருப்பதுபற்றிப் பேசினார் பிரதமர் தோழர் நூருல் அமீன்.

அவர் மேலும் கூறியதாவது: பண்டித நேரு அண்மையில் இந்துமகசபைபற்றிக் கூறியது அரைமனதானதேயாகும் இந்தியாவையும் பாகிஸ்தானையும் மீண்டும் இணைக்க வேண்டுமென்று இப்போது பேசுவது அர்த்தமற்றதாகுமென்று நேரு குறிப்பிட்டிருக்கிறார் இப்போது அர்த்தமற்றதென்றால், இனி வரும் காலத்திலாவது அப்படி இணைக்க வேண்டுமெனப் பேசுவது அர்த்தமும், பொருத்தமும் உடையதாவெனக் கேட்கிறேன்.

"பாகிஸ்தானை இந்தியாவுக்குள் திரும்பக்கொண்டுவந்துவிடவேண்டுமென இந்துமகாசபை தீர்மானத்திருப்பதை இந்திய சர்க்காரோ, பொறுப்புள்ள இந்துமதத் தலைவர்களோ, மறுத்தோதுக்கினரில்லை.

"போர் வெறியர்கட்கு நானொன்று கூறுவேன்— ஆற்றலும் திறனும் ஒழுக்கச் சிறப்புமுள்ளோரிடத்தில் எங்கள் வாள்கள் கூர்மையுடன் பிரகாசித்து வருகின்றன. ஆதிக்கக்காரரை எதிர்த்து நிற்பதில் தங்கள் இறுதிச் சொட்டு இரத்தம் உள்ள வரை அவர்கள் பின்வாங்கமாட்டார்கள்."

## பணந் திரட்டும் புதிய வழி

### டிகாலேயின் வெற்றி தரும் திட்டம்

பாரிஸ், ஜன. 6—

பிரான்ஸின் தலைவராக மீண்டும் தவிர்க்கு வாமுயலும் டிகாலே பணம் திரட்ட ஒரு புது வழியைக் கண்டுபிடித்திருக்கிறார். அவர் டிகாலேயின் நண்பர்கள் சங்கம் என்ற ஒரு இளப்பை ஆரம்பித்திருக்கிறார். இதற்கு மாத சந்தா ரூ. 13 என்று கூறப்படுகிறது.

இதுவரை இதன் மூலம் ரூ 20 0000 வரை டிகாலே சேர்த்துவிட்டாராம். கட்சியின் நிதி குறையவே, அதை ஈடுகட்ட இப்புதுவழி கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## பிப்ரவரியில்பார்மோஸா மீது கம்யூனிஸ்டுகள் படைஎடுப்பு!

### மாசேதுங் திட்டம் பற்றி தேசீயவாதிகள்

ஹாங்காங், ஜன. 6—

பார்மோஸ மீது படையெடுக்க சீனக் கம்யூனிஸ்டுகள் தீவிர முஸ்தீபைச் செய்து வருவதாகவே இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

யங்ட்ஸியை வெற்றிகரமாகக் கடந்த பிரபல ஜெனரல் சென்யி இடம், இந்தப் பொறுப்பை மாசேதுங் ஒப்படைத்திருப்பதாகக்கூறப்படுகிறது.

இப்படையெடுப்பு பிப்ரவரி முதல் மேக்குள் எப்பொழுதாவது இருக்கும் என்று, பார்மோஸாவிலுள்ள தேசிய சீன வட்டாரத்தில் நம்பப்படுகிறது.

'டெய்லி மெயிலின்' பார்மோஸா நிருபர் கூறுவதாவது:—பார்மோஸாவை விட்டால் சீன தேசீயப் படையினருக்கு இனி தஞ்சம் புக வேறு இடமில்லை. ஆகவே, தீவிர எதிர்ப்புக்கு அவர்கள் தயாராகவே இருக்க வேண்டும். இதை உத்தேசித்து பார்மோஸ பொருளாதாரநெருக்கடியினால் பலவீனப் பட்டும் என்று மாசேதுங் காலந் தாழ்த்தக்கூடும்.

## பரோடா மகாராஜா சொத்துக்கள் பகிரங்க ஏலத்துக்கு வரும்!

———(o)———

### குதிரைப் பந்தயத்தை மட்டும் விடும் எண்ணமில்லையாம்!

லண்டன், ஜன .6—

பரோடா மகாராஜா பிரிட்டனிலுள்ள தன் சொத்துக்களை எல்லாம் விற்றுவிடப்போகிறார். மறுபடியும் அறிவிக்கப்படும்வரையில் மகாராஜா மகாராணி இவர்களுக்கான எவ்வித டெலிபோன் அழைப்புகளும் கவனிக்கப்படமாட்டாதென்று அவர் காரியதரிசி அறிவித்திருக்கிறார்.

மகாராணியின் பெயரிலுள்ள சொத்துக்கள் எல்லாம் விற்பனைக்கு அங்கமாக ஏலத்திற்கே வரும் என்று கூறப்படுகிறது.

எப்ஸம் அருகில் உள்ள பரோடாவின் பிரதமர் தங்குமிடம் விற்கப்பட்டுவிடுமா என்பதுபற்றி எவ்விதத் தகவல்களும் கிடைக்கவில்லை.

ஆனால் குதிரைப்பந்தயத்தை மட்டும் மகாராஜா விட்டுவிடப்போவதில்லை என்று அவர் காரியதரிசி கூறியதாக ஒரு செய்தி கூறுகிறது

பரோடா மகாராஜா சீக்கிரமே பம்பாய்க்கு வருவார் என்று தெரிகிறது. பரோடா பம்பாயுடன் இணைக்கப்பட்டதிலிருந்து அவர் வருமானம் மிகவும் குறைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

## செஞ்சீனாவுக்கு பாகிஸ்தான் அங்கீகாரம்

சீனக் கம்யூனிஸ்டு சர்க்காருக்கு பாகிஸ்தான் அங்கீகாரம் வழங்கிவிட்டது. பாகிஸ்தான் சர்க்கார் ஜன 4-ந் தேதியன்று வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பொன்றின் மூலம் இது தெரியவருகிறது.

# மாலை மணி

சென்னை 7—1—50 சனிக்கிழமை


# முறியவில்லை, :: :: முடிவுபெறவுமில்லை

ஓராண்டு நிலவரியைக் கட்டாயக் கடனாகப் பெறுவது என்று, சென்னை ஆட்சிக் குழுவினர் தீட்டிய திட்டம், இன்னமும் மாண்டு மடியவில்லையாம்! மாறாக மலர்ந்து கொண்டுதானிருக்கின்றதாம்!

கட்டாய நிலவரிக் கடனை எம்முறையில் வசூலிப்பது என்பது இன்னமும் முடிவு செய்யப்படவில்லையானாலும், அத்திட்டம் கைவிடப்படவில்லை என்றும், இந்தத் திட்டத்தைச் சட்டமாக்கி அமுலுக்குக் கொண்டுவர மத்திய அரசாங்கத்தின் அனுமதி கிடைத்துவிட்டது என்றும் சென்னை நிதி அமைச்சர் கோபாலர், சட்ட சபையில் கேள்விக்கு விடையிறுக்கும்போது கூறியுள்ளார்.

கட்டாய நிலவரிக் கடன் வசூலிப்பது பற்றி சட்ட சபை உறுப்பினர்கள் பலர் சரமாரியாகக் கேள்விகள் கேட்டுள்ளனர். அவை அனைத்திற்கும், ஏதோ பதில் கூறிவிட்டோம் என்ற சமாதானத்தைப் பெற நிதி அமைச்சர் முயன்றிருப்பதாகத் தெரிகிறதே யல்லாமல், தாம் என்ன கூறுகிறோம் என் பதில் அக்கரை காட்டியிருப்பதாகத் தெரியவில்லை. பதில்கள் உண்மை நிலையை விளக்குவனவாகவோ, ஐயங்களை, அபாயங்களைப் போக்குவனவாகவோ இருக்கவில்லை. "பார்ப்பாத்தி அம்மா, மாடு வந்தது, கட்டினால் கட்டு, கட்டாவிட்டால் போ" என்ற பழமொழிப்படி, காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் செய்கிறோம், கேட்டால் கேளுங்கள், கேட்காவிட்டால் போங்கள் என்று மந்திரியாரின் மறுமொழிகள் அமைந்துகிடக்கின்றனவே யல்லாமல் நாட்டின் நிலையுணர்ந்து, எற்றது செய்து எழில் உண்டாக்குவோம் என்பதைத் தெளிவுபடுத்துவனவாக அமையவில்லை.

கட்டாய நிலவரிக் கடன் கேட்பது காலநிலைக்கும் ஏற்றதல்ல; குடியானவர்களின் பொருளாதார நிலைக்கும் ஒத்ததல்ல; அரசாங்கத்திற்கும் அழகல்ல; ஆகவே அந்தத் திட்டத்தைக் கைவிட்டு, வேறு வழிதேட வேண்டும் அரசாங்கம்; என்று பெரும்பாலான பத்திரிகைகளும், நாட்டு நிலையுணர்ந்தோரும், நல்லறிவாளர்களும் எடுத்துக் கூறிக்கண்டனந் தெரிவித்து வந்திருப்பதைப் பொதுமக்கள் நன்கு உணர்வார்கள். இதை அமைச்சர் உணர்வாரா என்று தோழர் சலாம் சட்டசபையில் கேட்டபொழுது மந்திரியார், மறுப்புகளைத் தாம் அறிந்துள்ளதாகவும், ஆனால் பிரபல மிராசுதாரர்களையும் பிரபல பட்டாதாரர்களையும் தாம் கலந்தாலோசித்த பொழுது, கட்டாயக்கடன் வசூலிக்கும் திட்டத்திற்கு அவர்களெல்லோரும் ஒப்புதல் அளித்துள்ளதாகவும் கூறியுள்ளார் பத்திரிகைக்காரர்கள் எழுதிய மறுப்புகளை அறிந்துள்ளார் அமைச்சர்! உண்மை அப்படியேயானால் மகிழ்ச்சி! அந்தமறுப்புகளுக்கு என்னபதில், என்ன சமாதானம்? ஏதாவது உண்டா, எனில், இல்லை! பிரபல மிராசுதாரர்கள் பட்டாதாரர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்பதே அமைச்சர் தர விரும்பும் பதில்! பிரபல மிராசுதாரர்கள் ஒப்புக் கொள்ளுகிறார்கள்! அவர்கள் ஒப்புக்கொள்வதால் அவர்களுக்கு என்ன அலாதிக் கஷ்டம் ஏற்பட்டு விடப்போகிறது. அவர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்று கூறிப்பூரிப்படைகிறார் அமைச்சர்? கட்டாய நிலவரிக்கடன் செலுத்துவதால், வடபாதி மங்கலத்தாருக்கோ, நெடும்பலத்தாருக்கோ சீயாழியாருக்கோ, தர்மபுரத்தாருக்கோ, திருவாவடுதுறையாருக்கோ என்ன ஆபத்து ஏற்பட்டுவிடப் போகிறது? அமைச்சர் சம்மதம் கேட்கும்போது அத்தகையோர் சம்மதம் கூறுமல், சமாபுரிவர்? அவர்களுக்கிருக்கும் கஷ்டமெல்லாம் சம்மதம் தெரிவிப்பதிலில்லை, சம்மதம் தெரிவிக்காமலிருப்பதில்தான்; சம்மதம் தெரிவிக்காவிட்டால், காங்கிரஸ் ஆட்சியில் என்ன ஆபத்து, எப்படி வந்து தாக்குமோ, என்று அவர்கள் கதிகலங்க வேண்டியிருக்கிறது! ஆகவேதான் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்! அந்த ஒப்புதல் உண்மை நிலையை உணர்த்துவதல்லவே! உண்மைநிலையைஉள்ளபடியே உணர்த்துவோர் ஆயிரக்கணக்கான ஏழை விவசாயிகளேயல்லாமல், விரல்விட்டு எண்ணக்கூடிய பிரபல மிராசுதாரர்கள் அல்லவே!

கடன்பட்டு, வறுமையால் பிடிக்கப்பட்டு குறைச்சல் விளைவால் கஷ்டப்பட்டு ஓராண்டு கிஸ்தியே ஒழுங்காக செலுத்த முடியாமல் உடைந்த வாழ்வோடு காட்சியளிக்கும் ஏழை விவசாயி, எப்படி கடன் கொடுத்துதவ முடியும்? அவன் ஏன் கடன் கொடுக்கவேண்டும்? கடன் கொடுத்துதவக் கூடிய முதலாளிகள் பணக்காரர்கள் — ஆலை அரசுகள் — மடாதிபதிகள் — கடவுளர்கள் இருக்கும்போது அவர்களையெல்லாம் விட்டுவிட்டு, ஏன் ஏழையர்களே ஏராளமாக நிறைந்திருக்கும் விவசாயத் தொழில் மீது கடன் சுமையை ஏற்றவேண்டும்! இதுதான் ஏழை பங்காளர் ஆட்சியின் இலட்சணமா?

பொது மார்க்கட்டின்மூலம்! என் பொது மக்களிடம் பெதுக்கடன் திரட்டக்கூடாது என்று தோழர் பீரம் அமிருதீன் கேட்ட கேள்விக்கு, நாட்டின் சூழ்நிலை அதற்கு இடங்கொடுக்கவில்லை என்று மந்திரியார் பதில் கூறுகிறார். நாட்டின் எந்த சூழ்நிலை அதற்கு இடங்கொடுக்கவில்லை என்றாவது அமைச்சர் விளக்கியிருக்க வேண்டாம்? பொதுக் கடன் திரட்டுவதற்கு மட்டும் இடங்கொடுக்காத சூழ்நிலை, கட்டாய நிலவரிக் கடனை மட்டும் வசூலிக்க எப்படி இடங்கொடுத்ததோ தெரியவில்லை? அமைச்சரின் கூற்றுக்களைப் பார்க்கும்போது, நாட்டில் உள்ள நிலையை அறிந்துகொள்ள அவர் மறுக்கிறார் என்பது தான் வெளிப்படையாகத் தெரிகிறது.

காங்கிரஸ் அரசாங்கத்தின் அணைப்பு முதலாளிகள்-பணக்காரர்கள் பக்கமும், ஆத்திரம் ஏழை-எளியவர் பக்கமும் சாய்கின்றன? முடிவு என்னாகும் என்பதை இப்பொழுதே காங்கிரஸ் உணர்ந்துகொள்வது அதற்குத்தானே நல்லது, முன்னாள் பிரதமர் ஓமந்தூரார் கூறுகிற கூற்றுப்படி!

கட்டாய நிலவரிக் கடன் வசூலிக்கும் திட்டம் முறியவில்லை; முடிவு பெறவுமில்லை! என்று கூறுவது ஆணவத்தைக் காட்டுமே யொழிய, அறிவுடைமையை உணர்த்தாது!

---

## பொத்தனூரில் (சேலம்) பொதுக்கூட்டம்

10—1—50 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பொத்தனூர் தி. மு. க. பொதுக் கூட்டம் நடைபெறும்.

அதுபோது தோழர்கள்

**சி. என். அண்ணாத்துரை**

**அ. சித்தையன்**

**ஜி. பி. சோமசுந்தரம்**

ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்

---

## இந்தியாவில் 'அஸ்பெஸ்டாஸ்'

லண்டன், ஜன. 6—

இந்தியாவில் அஸ்பெஸ்டாஸ் உற்பத்திக்கு [illegible] இருக்கிறதென்று அஸ்பெஸ்டாஸ் கம்பெனியின் தலைவர் [illegible] இந்தியாவின் இவர்கள் தொழிற்சாலை [illegible] அஸ்பெஸ்டாஸ் உற்பத்தி செய்கிறார்கள். [illegible] பண்டங்களுக்கு உலகின் பல பாகங்களில் இருந்து வருகிறது என்று [illegible] கூறினார்.

---

## அறிவுக் கதிர்!

ஒரு மொழி தேசிய மொழியாக வேண்டுமானால் அது தேசத்திற்கு கலைஞர்களை, அறிவாளிகளைப் பெற்றுக் கொடுத்திருக்கவேண்டும். அப்படி ஹிந்தி யாரையாகிலும் தோற்றுவித்திருக்கிறதா? ஆங்கிலத்தோடு அதை ஒப்பிட்டுப் பாருங்கள். ஆங்கிலம் ஹிந்தி ஆகிய இரண்டு மொழிகளில் எது சிறந்த மொழி? ஒரு தமிழ் நாட்டுச் சிறு குழந்தையைக் கேளுங்கள்; அதுகூடச் சொல்லும் ஆங்கிலந்தான் சிறந்ததென்று

—தமிழ்ப் பெரியார் திரு வி. க.

---

## பொங்கல் விழா :: :: கொண்டாடுக!

பொங்கல் விழா — அறுவடை விழா — உழவர் தம் பெருவிழா — மகிழ்ச்சிவிழா!

உழவுத் தொழில் திராவிடத்தின் அச்சாணி போன்றது—எனவே பொங்கல் பெருநாள் திராவிடர் தம் திருநாள்!

பொங்கல் திருநாள்—தை முதல்நாள்—திராவிடர்க்கு ஆண்டின் முதல் நாள்!

ஆற்றிய கடமை கண்டு மகிழவும், ஆற்றவேண்டிய கடமை நெறி உணரவும் அந்நாள் நாட்டவர் அனைவர்க்கும் பயன்படும் நன்னாள்!

திராவிடத்தின் தனிப்பெரும் இயக்கமாக இருந்து பாடுபட்டுவரும் திராவிட முன்னேற்றக் கழகம், பொங்கற் பெருநாள் விழாவைக் கொண்டாட வேண்டிய தனிக் கடமையும் தனிச் சிறப்பும் கொண்டாடவேண்டிய தனிக் கடமையும், தனிச் சிறப்பும் கொண்டதாகும்.

எனவேதான், பொங்கல் விழாவைத் தக்கமுறையில் கொண்டாடும்படி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகளைக் கேட்டுக்கொள்கிறோம்.

கழகக் கொடியேற்றுதல் — ஊர்வலம் நடத்துதல் — பொதுக் கூட்டம் கூட்டுதல் — இன்னிசையரங்கு அமைத்தல் — நாடகம் ஆடிக் காட்டுதல் — எழுத்துப் போட்டி, பேச்சுப் போட்டி, இசைப் போட்டி, நடிப்புப் போட்டி, உடற்பயிற்சிப்போட்டி, ஓட்டப்பந்தயப் போட்டி, பந்து விளையாட்டுப் போட்டி, மாடுகள் பிடிக்கும், போட்டி ஆகிய போட்டிகள் அமைத்தும் பரிசுகள் வழங்குதல் ஏழை எளியவர்கட்கு இன்னமுது வழங்குதல், போன்றவைகளில் வசதிக்குப் பொருந்தும் ஏற்றபடி அமைத்துக்கொண்டு விழாவினைச் சீரியமுறையில் கொண்டாடுக!

உறுப்பினர் சேர்த்தல் போன்ற கடமையையும் களிப்போடு இயற்றுக!

கொடி ஏற்றுமின்! கொள்கையை விளக்குமின்!

உறுதிகொள்க! செயலாற்றுக சிறந்துவிளங்குக!

**இரா. நெடுஞ்செழியன்**

*செயலர் பிரசாரக்குழு தி. மு. க. தலைமை நிலையம்*

---

## கிரீஸ் சேனாதிபதி ராஜிநாமா

### அரசியலில் இறங்குவார்

லண்டன், ஜன. 6—

கிரீஸ் கம்யூனிஸ்டு கொரில்லாக்களை முறியடித்து வெற்றி பெற்ற சேனாதிபதி பேபாகாஸ் தன் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். ஏப்ரலில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் அவர் தனியாக ஒரு கட்சி அமைத்து அதன் மூலம் போட்டியிடுவார் என்று கூறப்படுகிறது. பெரிய கட்சியான பாபுலரிஸ்ட் கட்சி தலைவர் ஸல்டாரிஸிடமிருந்து இவருக்குப் பலத்த எதிர்ப்பு ஏற்படலாம் என்று கூறப்படுகிறது.

---

## பாரபீனில் ஓடும் கார்கள்

லண்டன், ஜன 5—

பெட்ரோல் இல்லாமல் பாரபீனிலேயே ஓடக்கூடிய 'காஸ் டர்பைன்' மோட்டார்களை பிரிட்டிஷ் ஆராய்ச்சி வல்லுநர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர் இந்த கார்களுக்கு பிஸ்டன் ஸிலிண்டர்ஸ் கார்ப்பிளக் முதலியவைகள் கிடையாதாம். இந்த டர்பைன்கஸ் மோட்டார்கார்களைச் செய்வதில் அநேகமாக எல்லா மோட்டார் கம்பெனிகளுமே கவனத்தை செலுத்திவருகிறது சீக்கிரமே இக் கார்களுக்கு உலகில் ஏக கிராக்கி ஏற்பட்டுவிடுமென்று தெரிகிறது இந்த மோட்டாரை வைத்துக்கொள்ள ஆகும் செலவு மிகவும் குறைகிறதாம் பவாரிக்கும் இவை சுகமாக இருக்கின்றனவாம்.

---

மைசூர் தொழில் இலாகா உதவி டைரக்டர் தோழர் கே. எல் [illegible], இந்திய சர்க்காரின் குடிசைத் தொழில்கள் டெபுடி டெவலப்மெண்ட் ஆபீஸராக நியமிக்கப்பெற்றுள்ளார். [illegible] களுக்கு அவரது சர்வீஸ் கடன் [illegible] பட்டிருக்கிறது.

---

## பார்லிமெண்டில் ரகசிய 'மைக்ரோபோன்கள்'

பான், ஜன. 5—

மேற்கு ஜெர்மனியின் தலைநகரான பான் நகரிலுள்ள பார்லிமெண்டில் தலைவர்கள் ரகசியமாகக் கூடி ஆலோசனை செய்யும் அறைகளில் சில மைக்ரோபோன்கள் ஒளித்துவைக்கப்பட்டிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

பிரிட்டிஷ் பாதுகாப்பு அதிகாரிகளே இதைக் கண்டுபிடித்தனர். ரகசியமாக சர்க்கார் தலைவர்கள் செய்யும் முடிவுகள் எல்லாம் எப்படியோ பார்லிமெண்டின் கம்யூனிஸ்ட் மெம்பர்களுக்கு முன்னதாகவே தெரிந்து வந்ததிலிருந்தே சந்தேகம் ஏற்பட்டது.

---

## காவற் கைதிகள் உண்ணாவிரதம்

டல்லி பாளையம் சிறையிலுள்ள கம்யூனிஸ்ட்— தொழிற்சங்கக் காவற் கைதிகள் அறுவர் ஜனவரி 6-ந் தேதிமுதல் உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கின்றனரெனத் தெரிகிறது. அதிகாரிகள் தங்கள் கோரிக்கைகளை நிறைவு செய்யத் தவறியமையே இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

உடனடி விடுதலை, அல்லது சட்ட பூர்வமான விசாரணை, மெக்கும் பஞ்சாப் பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்தல், கம்யூனிஸ்ட் காவற் கைதிகளுக்கு ஒரே மாதிரியான வகுப்பு, குடும்ப அலவன்ஸ் ஆகியவைகளே உண்ணாவிரதக்காரரின் கோரிக்கைகளெனத் தெரிகிறது.

---

## மேட்டூர் தண்ணீர்சப்ளைத்திட்டம்

சேலம் நகரசபையின் மேட்டூர் நீர் சப்ளைத் திட்டத்தை (திட்டமானது நிறைவேறுமவிருப்பது) அமுல் நடத்துவது பற்றி கடந்த சில மாதங்களாக அதிகாரிகள் ஏற்பாடுகள் நடத்திவருவதாகத் தெரிகிறது. சேலம்—அம்மாபேட்டையில் தண்ணீர்த் தேக்கக் கட்டிடம் வேலை அவசரப்பட்டிருக்கிறது.

